தென்னாற்காடு மாவட்டம் திருவக்கரை அருளமிகு சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்.

639— (*வினா எண் 9355)— திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருவக்கரையில் உள்ள அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் ஆலய இராசகோபுரத்தை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தென் ஆற்காடு மாவட்டம், வானூர் வட்டம் திருவக்கரை அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில் இராஜ கோபுரத்தை புதுப்பிக்க இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத் திருக்கோயிலின் இராஜகோபுரம் புதுப்பித்தல் மற்றும் இதர திருப்பணி வேலைகளை மேற்கொள்ள ரூ. 4,00,000-க்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு மேற்படி வேலைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. விரைவில் அதற்கு அங்கீகாரம் வழங்கி, வேலையைத் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவக்கரையில் இருக்கின்ற அருள்மிகு சந்திர மௌலீஸ்வரர் ஆலயம் சோழர் காலத்தில் கற்றுளியாக்கப்பட்ட ஒரு புராதனமான திருக்கோயில் என்று வரலாறுகள் சொல்கின்றன. அப்படிப்பட்ட திருக்கோயில் இராஜகோபுரம் சீர்கெட்டு, அதைச் சுற்றியிருக்கின்ற மதிற்சுவர்கள் சிதிலமடைந்திருக்கிறது. ஆகையால் இராஜகோபுரத்தைச் சீரமைக்க அறநிலையத்துறை பணிகளை மேற் கொண்டுள்ளது என்று சொல்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் அத்தோடு அந்தச் சுற்றுப்புற மதிலையும் சீர்படுத்தித் தர முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ராஜகோபுரமும், அதையடுத்து மற்ற திருப்பணிகளும் அந்த மதிப்பீட்டில் அடங்கியிருக்கிறது.

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவக்கரை அருள்மீகு சந்திரமௌலீஸ்வரர் ஆலயம் சங்கராபரணி ஆற்று ஓரத்திலே அமைந்திருக்கின்ற ஒரு திருக்கோயிலாகும். யாத்திரிகர்கள் வருகின்றபோது அந்த சங்கராபரணி ஆற்றின் அக்கரையிலே வாகனங்களை விட்டுவிடுகிறார்கள். ஏறத்தாழ அந்தக் கோயிலுக்கு 2 கிலோ மீட்டர் நடந்து வர வேண்டியிருக்கின்ற காரணத்தால் பயணிகள், யாத்திரிகர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே அது ஒரு சிறந்த ஸ்தலமாக

இருப்பதோடு அந்த சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்திற்குள்ளே பத்ரகாளிக்கு என்று ஒரு கோயிலும் உள்ளது. அந்த கோயிலுக்கு பௌர்ணமி நாளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து போகிறார்கள். அவர்களுடைய நன்மையைக் கருதி, அந்த சங்கராபரணி ஆற்றில் ஒரு தரைப்பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும். நாங்களும் அதற்கு உறுதுணையாக இருப்போம்.

பால் விநியோகத்திற்கு வயர்லஸ் கருவி.

640—(*வினா எண் 7253)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோகத்தை சீர்படுத்துவதற்காக வயர்லஸ் கருவிகளைப் பயன்படுத்தும் திட்டம் எப்போது முதல் செயல்படும்?

(ஆ) இந்த திட்டம் எந்தப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் வயர்லெஸ் கருவிகள் பயன்படுத்தும் திட்டம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம் அம்பத்தூரிலும் நந்தனத்திலும் அமுலில் உள்ளது. மேலும் மாதவரத்திலும் நிலையான நிலையம் ஒன்று அமைக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் தேசிய பால் பண்ணை வாரியத்தின் கொள்கையின் அடிப்படையில் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வரும் ஒன்பது மாவட்டங்களில் (very high frequency) செயல்பட ஒரு திட்டம் அமல்படுத்தப் பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தால் ஏற்படும் பலன் என்ன? இதற்காக அரசு செலவழிக்கிற தொகை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் மற்றும் பால் ஏற்றிச் செல்கின்ற லாரிகள் இவைகளில் தவறுகள் நடக்காமல் இருப்பதற்கும், குற்றங்கள் நடந்தால் உடனுக்குடன் கண்டு பிடிப்பதற்கும் இது பயன்படுகிறது.